கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (நவம்பர்/டிசெம்பர் 2019)

# FAS 3223 Colonial and Post-colonial Art

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (அ) தேசியவாதம் என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது? சுருக்கமாக கூறுக.
(05 புள்ளிகள்)

(ஆ) தேசியக்கலை உருவாக்கம் என்பது கலை பண்பாட்டு பன்மைத்துவத்தை மறுதலித்து ஒருமைத்தன்மையினை வலியுறுத்துமாற்றை உதாரணங்கள் காட்டி ஆராய்க.
(09 புள்ளிகள்)

02. (அ) 'நுகர்வுப் பண்பாட்டு உருவாக்கம்' என்பது குறித்து சுருக்கமாக விளக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) "பாரம்பரியக் கலைகளூடாக சமூகப் பங்குபற்றல் வலுவடைவதை வலுவிழக்கச் செய்தல். காலனிய கலையாக்கங்களின் உள்நோக்கமாகும்" இக்கூற்றை ஆராய்க.
(09 புள்ளிகள்)

03. (அ) காலனிய நீக்கம் என்றால் என்ன? சுருக்கமாக விபரிக்குக.
(05 புள்ளிகள்)

(ஆ) காலனிய நீக்க கலையாக்கச் செயற்பாடுகளை பொருத்தமான உதாரணத்தினூடாக எடுத்துக் காட்டுக.
(09 புள்ளிகள்)

## பகுதி – II

04. கலை, கைவினை என்கின்ற பாகுபாட்டின் பின்னால் நின்றியங்கும் காலனிய சிந்தனையினை விளக்குக.
(24 புள்ளிகள்)

05. உயர் கலை மரபாக இசையில் கர்நாடக சங்கீதத்தையும் நடனத்தில் பரதத்தையும் கொண்டாடும் தமிழ் சமூகத்தின் உளவியலை விளக்குக.
(24 புள்ளிகள்)

06. உள்ளூர் சடங்கு முறைகள் கைவிடப்பட்டு சமஸ்கிருத வழிபாட்டு முறைகள் முன்னெடுக்கப்படும் சூழலின் கலைபயில்வு மாற்றம் பற்றிக் கூறுக.
(24 புள்ளிகள்)

07. "பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் இலங்கைத் தமிழ் சூழலில் இயங்கிய பின்காலனியச் சிந்தனையாளராவார்" பேராசிரியரின் கலையாக்க முயற்சிகளூடாக இக்கூற்றினை ஆராய்க.
(24 புள்ளிகள்)

*****